## மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் - 2013

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க கமத்தொழிற் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக விரிவான வருமானக்கூற்று, நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத அல்லது விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமை

சபைக்குச் சொந்தமான 17 தோட்டங்களில் 16 தோட்டங்கள் தொடர்ச்சியான நட்டத்தை அடைந்திருந்ததால் 2012 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 252,874,365 தொகையான தேறிய சொத்துக்கள் 2013 திசெம்பர் 31 வரையில் ரூபா 298,188,624 தொகையான

எதிர்ப்பெறுமதி வரை குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக இத்தேறிய சொத்துக்களில் குறைவு 218 சதவீதம் வரையான கூடிய சதவீதமொன்றாக இருந்தது. இதற்கு மேலதிகமாக அறிக்கையின் 2.2.7 மற்றும் 3.3 (அ) போன்ற விடயங்களைக் கருத்திற் கொண்டால் இந்நிலைமை அதிகரிக்கும் தன்மை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் அரசின் அல்லது ஏனைய நிதி உதவி இல்லாமல் சபையை தொடர்ச்சியாக நடாத்திச்செல்வது நிச்சயமற்ற நிலைமையில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 இன் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய சொத்துக்கள் இனங் காணப்படாமல் காணி மற்றும் கட்டிடங்களின் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய புதிய இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLRFS) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) என்பவற்றிற்கு இணங்கும் வகையில் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் 01 (SLRFS 01) இன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் முதன் முறையாக பின்பற்றப்படல் (First Time Adoption) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) நாகஸ்தன்ன தோட்டம் மற்றும் தனியார் கம்பனியொன்றுடன் கூட்டு வியாபாரத்தின் 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் தேயிலை முகவர்களுக்கு செய்யப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,176,683 கிடைக்க வேண்டிய தொகையாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தோட்டப் பிரிவினால் இனங்காணப்பட்டிருந்த ரூபா 50,735,840 தொகையான செலுத்த வேண்டிய ஊழிய சேமலாப மிகை கட்டணத்தை செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக தோட்ட கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) கலஹா, போப்பிட்டிய, கந்தல்ஓய மற்றும் ஹோப் தோட்டப் பிரிவுகளுக்குரிய கணக்கிடப்பட்ட ரூபா 14,775,049 தொகையான பணிக்கொடை மிகை அறவீடுகளின் அளவினை குறித்த தோட்டங்களின் உற்பத்திச் செலவினமாக கருதப்பட்டிருந்தது.

(ஈ) கிடைக்க வேண்டிய நானாவித மீதியான ரூபா 3,202,747 தொகையில் ரூபா 2,496,613 தொகையான இணக்கம் செய்யப்படாத சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(உ) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடமொன்றுக்காக 2010 நவெம்பர் மாதத்திலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,931,188 தொகையான குத்தகை தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகளும் தொங்கல் கணக்கும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 4 தோட்டங்களுக்குரித்தாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த பணிக்கொடை மிகை அறவீடுகள், பட்டோலைகளுடன் இணக்கம் செய்யப்பட்ட போது ரூபா 5,541,963 ஆன வேறுபாடு ஒன்றும் ஊழியர் சேமலாப பணிக்கொடை மிகை அறவீட்டுச் செலவினப் பேரேட்டுக் கணக்கு மற்றும் இறுதிக் கணக்குகளுக்கு இடையே ரூபா 776,042 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மொன்ன கிரிஸ்தோ தோட்டம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த தனியார் நிறுவனத்திடமிருந்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 5,101,794 தொகையாக இருந்த போதிலும், அது கணக்கின் பிரகாரம் ரூபா 784,800 ஆக இருந்தது. வேறுபாட்டை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைமை அலுவலகத்திற்கும் ஒவ்வொரு தோட்டத்திற்குரிய இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 11,194,109 தொகை மற்றும் ரூபா 5,082,066 ஆக இருந்தன. இம்மீதிகள் நீண்டகாலமாக தொங்கல் கணக்கு மீதிகளாக முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், அம்மீதிகளை இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கீழே காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் காணப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

| | விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லாத சொத்துக்கள் | 2,100,288,935 | (i) பட்டோலைகள்<br>(ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(iii) மெய்மையாய்வு அறிக்கை<br>(iv) உரித்துச் சான்று உறுதிகள் |
| (ஆ) | பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | 400,575,027 | கணக்கீடு செய்யப்பட்ட பட்டோலை |
| (இ) | இறுதி இருப்புக்கள் | 95,736,379 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| (ஈ) | வியாபார கிடைக்க வேண்டிய | 154,302,296 | (i) பட்டோலைகள்<br>(ii) மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (உ) | நானவித கடன்பட்டோர் | 131,908,927 | (i) பட்டோலைகள்<br>(ii) மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஊ) | வைப்புக்கள் | 1,088,935 | வைப்புச் சான்றிதழ்கள் |
| (எ) | பெருந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்டம் | 4,136,732 | மீளளிப்பிற்காக அனுப்பப்பட்ட செலவினங்களின் விரிவான அறிக்கை |
| (ஏ) | கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை | 5,935,240 | பட்டோலைகள் |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | தேயிலை கொழுந்திற்கான கடன்பட்டோர் | 20,538,071 | (i) பட்டோலைகள்<br>(ii) காலப்பகுப்பாய்வு |
| (ஒ) | ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை நிதியம்/ இலங்கை பெருந்தோட்ட செய்கையாளர்களின் சேமலாபச் சங்கம் / தோட்ட ஊழியர் சேமலாபச் சங்கம் | 719,149,421 | (i) பட்டோலைகள்<br>(ii) உரித்துடையவர்களின் மீதிப் பட்டியல் |
| (ஓ) | பணிக்கொடை ஒதுக்கீடு | 1,067,123,203 | பட்டோலைகள் |

### 2.2.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) நானாவித பெறுவனவுகளாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 706,134 பெறுமதியான தொகை 20 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையாக இருந்ததுடன், அம்மீதிகள் 5 ஆண்டு காலமாக சீராக்கம் செய்யப்படாமல் பேணப்பட்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) மக்கள் தோட்ட அமைச்சின் பெயரில் கிடைக்க வேண்டிய கட்டிட வாடகை மற்றும் பாதுகாப்பு கட்டணங்கள் முறையே ரூபா 1,225,841 தொகை மற்றும் ரூபா 305,321 தொகை என்பன கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்த அமைச்சு அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், இம்மீதிகள் அறவிடப்பட வேண்டிய மீதிகளாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் கட்டிடங்கள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 20,432,822 தொகையாக இருந்தது. இத்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் பெயரில் உள்ள 7 கணக்குகளில் பெறவேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,812,143 ஆக இருந்ததுடன், அம்மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தனியார் கம்பனியொன்றிடமிருந்தும் தனியார் நிறுவனமொன்றிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை முறையே ரூபா 39 மில்லியன் மற்றும் ரூபா 645,835 ஆன தொகைகள் 2014 யூன் 06 ஆம் திகதி வரையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 நிதி முகாமைத்துவத்தின் பலவீனங்கள்

முறையான திட்டமொன்றைத் தயாரித்து செலவினக் கட்டுப்பாடு ஒன்றை மேற்கொள்ளாமலும் கிடைக்க வேண்டிய வருமானத்தை குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் அறவிடுவதற்கு முறைமையொன்றை மேற்கொள்ளாமை மற்றும் நிதி வழங்கல் மார்க்கம் தொடர்பில் கவனத்தைச் செலுத்தாமையினால் சபை பாரிய நிதிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இந்நிலைமை பின்வரும் விடயங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

(அ) சட்டரீதியாக கடப்பாட்டினைக் கொண்டுள்ள கொடுப்பனவுகளை நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் கொடுப்பனவு செய்ய முடியவில்லை.

| | ரூபா |
|---|---|
| 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் | 333,672,565 |
| 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் | 31,488,978 |
| 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் | 412,806,300 |
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் | 29,661,379 |
| 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் | 7,752,214 |
| 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் | 4,396,757 |
| | 819,778,193 |

(ஆ) கொடுப்பனவுகள் உரிய முறையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமையாலும் -- நிதி வழங்கல் தெரிவு செய்யாமையாலும் கீழே காட்டப்பட்டுள்ள மேலதிக செலவினங்களை மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்தது.

| | ரூபா |
|---|---|
| தரகர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட முற்பணங்களுக்கான வட்டி | 35,220,694 |
| வங்கி மேலதிகப் பற்று வட்டி | 11,431,313 |
| கொடுப்பனவுகளை தாமதமாக்கியமால் செலுத்தப்பட்ட தண்டப்பணம் | |
| ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புத் தொகை | 7,446,774 |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை | 66,108,312 |
| தோட்ட ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை | 175,264 |
| இலங்கை பெருந்தோட்ட பயிர்ச் செய்கையாளர்களின் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை | 148,131 |
| ஊழியர் பணிக்கொடை | 74,121,115 |
| மின்சாரப் பட்டியல் | 332,040 |
| வீத வரி | 854,308 |
| | 195,837,951 |

(இ) வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளுக்காக பணம் கிடைக்கும் போது அந்நிறுவனங்களால் குறைத்துக் கொள்ளப்பட்டிருந்த நிறுத்தி வைத்தல்கள் வரி மீதி ரூபா 9,481,143 தொகையாக இருந்ததுடன், அம்மீதியை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திடமிருந்து அறவீடு செய்வதற்கோ அல்லது ஈடுசெய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 272(3) | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் கொடுப்பனவு மேற்கொண்டு 06 வாரங்கள் கடந்ததன் பின்னர் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 395 | வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரிய கணக்கிணக்கக் கூற்றுக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப் பிரமாணம் 756 மற்றும் 757 | ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படும் மனித மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றைப் பரிசோதித்து அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப் பிரமாணம் 1646 | அனைத்து வாகனங்களினதும் ஓட்டப் பதிவேடுகளின் மூலப் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தலைமை அலுவலகத்திலும் தோட்டங்களிலும் இணைக்கப்பட்டுள்ள வாகனங்களினது ஓட்டப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையின் அனைத்து வாகங்களுக்காக எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 2 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதன் தீர்மானங்களும் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 500,500,277 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 199,543,724 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 300,956,553 ஆல் அதிகரித்திருந்தன. முன்னைய ஆண்டுகளில் சீராக்கங்கள் செய்யப்படாத ரூபா 139,453,385 தொகையான ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் பணிக்கொடை என்பவற்றிற்கு மிகை அறவீட்டிற்கான நிதிஏற்பாடு, செலுத்த வேண்டிய பணிக்கொடைகளுக்காக ரூபா 72,631,318 தொகையான ஏற்பாடு, பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 182,463,654 என்பவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்தமை மற்றும் தோட்டத்துறையில் அடைந்த நட்டம் 5 சதவீதத்தால் அதிகரித்தமை என்பன இந்நட்டம் அதிகரித்தமைக்கு காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

| நிதி நிலைமை | 2013 | 2012 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1:2.9 | 1:2.4 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:3.4 | 1:2.8 |

நடைமுறை சொத்து மற்றும் விகிதம் விரைவுச் சொத்து விகிதம் என்பவற்றின் பிரகாரம் சபை சிறந்த நிதி நிலைமையொன்றில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 நிறுவகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றிற்கு உரிய முறையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாததன் காரணமாக தொழில் ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 364 ஆக இருந்ததுடன், அதன் காரணமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 322,905,437 ஆக இருந்தது.

(ஆ) தனியார் துறையால் சபைக்கு எதிராக 47 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 1,532,149 தொகை சட்டத்தரணிகள் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சபையினால் ஒரு கிலோ கிராம் அலகு தேயிலை உற்பத்தி செய்யும் போது செலவு செய்வதற்கு ஏற்படும் ஆரம்ப கிரயம், ஒரு கிலோ கிராம் அலகு தேயிலை விற்பனை வருமானத்திலிருந்து ஈடுசெய்ய முடியாத நிலைமையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் ஒரு கிலோ கிராம் அலகின் உற்பத்திக் கிரயம் (COP) ஒரு கிலோ கிராம் அலகின் சாதாரண விற்பனை பெறுமதி (NSA) மற்றும்

அலகிற்கான பங்களிப்புடன் ஒப்பிடும் போது 12 தோட்டங்களில் ஒரு கிலோ கிராம் அலகு பங்களிப்பின் நட்டம் ரூபா 27 முதல் ரூபா 426 வரையான வீச்சில் காணப்பட்டன.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மோட்டார் வாகனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றை பராமரிக்கும் போது அத்தகைய பராமரிப்புக்கள் தொடர்பான விபரங்களை பதிவேடொன்றில் உட்படுத்தி பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் ஒரே காரணத்திற்காக மீண்டும் மீண்டும் கொடுப்பனவு செய்தமையால் தவறுகளும் மோசடிகளும் இடம் பெறக்கூடுமென அவதானிக்கப்பட்டன.

(ஆ) மானிகள் இல்லாமல் தோட்ட உத்தியோகபூர்வ வீடுகளுக்கு தொழிற்சாலைகளிலிருந்து மின்சாரத்தை வழங்கிய காரணத்தால் உத்தியோகபூர்வ வீடுகளுக்குரிய வீட்டு மின்சாரப் பாவனை எவ்வளவு என்பதை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

(இ) இலக்கம் 320 டார்லி வீதியில் அமைந்துள்ள ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்குரிய குத்தகையாளர்களை தெரிவு செய்கையில் போட்டி அடிப்படையொன்றில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், குறித்த ஆதனங்கள் அரச விலை மதிப்பீட்டாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்குரிய 122 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தம் காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்ட மதிப்பீடொன்று, சாத்திய வளஆய்வொன்று மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 2,593,180 தொகை செலவு செய்து ஹோப் தோட்டத்தில் குடிநீர் போத்தல் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் அது கைவிடப்பட்டிருந்தது.

(உ) முல்ஹல்கலே தோட்டத்தின் மாதாந்த செலவினத்தை முன்னரே மேற்கொள்ள வேண்டிய நிலைமையொன்றின் கீழ் அத்தோட்டத்தை செயற்பாடற்ற நிலைமையில் நடாத்திச் செய்வதற்குப் பதிலாக நிறுவகத்தின் முதலீட்டின் மூலம் மீளமைப்பதற்கோ அல்லது தனியார் துறையினரின் பங்களிப்பு அடிப்படையில் நிறுவகத்திற்கு ஏதேனும் நலனொன்று கிடைக்கும் வகையில் அபிவிருத்தி செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜனவசம ''ஜன தேயிலை'' விற்பனையிலிருந்து 90 சதவீதத்திலிருந்து 95 சதவீதம் வரையான அளவில் பிரதிநிதித்துவப்படுத்திய தரைப்படைக்கு விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் விலையை அதிகரித்தமை முறையற்றதாக இருந்தமையால் 2013 யூலை மாதத்திலிருந்து கட்டளையிடுதல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக சபைக்கு வருடாந்தம் ரூபா 40,320,000/- தொயையான மதிப்பிடப்பட்ட நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) பச்சை தேயிலை கொழுந்தினை தனியார் பிரிவிற்கு விற்பனை செய்யும் போது மொத்த பாரத்தில் நீரின் நிறை நெட்டியின் நிறை மற்றும் முதிர்ச்சியான கொழுந்து என்பவற்றிற்காக கழிக்கப்படும் சதவீதம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வேறுபட்டுக் காணப்பட்டன.

(இ) திறந்த போட்டி அடிப்படையில் கொள்வனவாளர்களைத் தெரிவு செய்யாமலும் உடன்படிக்கையொன்று இல்லாமலும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 2,075,500 கிலோ கிராம் மற்றும் 2,840,401 கிலோ கிராம் தேயிலை தனியார் துறைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(ஈ) தேயிலை உற்பத்தியின் போது மொத்த உற்பத்தியில் 70 சதவீத அளவில் பிரதான உற்பத்தி தொகுதிகளைக் கொண்டிருக்க வேண்டியிருந்த போதிலும், ஹோப் தோட்டத்தின் தொழிற்சாலையில் காணப்படும் பலவீனங்கள் மற்றும் தேயிலை கொழுந்துகளின் தரம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை காரணமாக பிரதான உற்பத்தி தொகுதியின் பங்களிப்பு மொத்த உற்பத்தியில் 50 சதவீதம்வரை குறைவடைந்திருந்தது.

**4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரொக்வூட் தோட்டத்தில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 53,113 தேயிலை நாற்றுக்களுடன் கூடிய நாற்றுமேடை 2013 யூன் மாதம் வரையிலும் களத்தில் நடப்படாமல் நாற்றுமேடை மட்டத்திலேயே பராமரித்து வரப்பட்டிருந்தது. நாற்றுமேடை ஆரம்பிக்கப்பட்டு 09 மாதங்கள் கடந்தும் அந்நாற்றுக்களை வெளிக்களத்தில் நடுதல் பொருளாதார ரீதியில் பயனுள்ளதாக இருந்ததுடன் இந்நாற்றுமேடைகள் முறையே 5 ஆண்டுகள் மற்றும் 4 ஆண்டுகள் நாற்றுமேடை மட்டத்திலேயே பராமரித்துச் செல்லப்பட்டிருந்தன.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 ஆண்டு காலப்பகுதியில் கந்தல்ஓய தேயிலை தொழிற்சாலை மூடப்பட்டிருந்ததுடன், தொழிற்சாலையின் மூன்று ஊழியர்களுக்கு செயற்திறனான சேவையைப் பெற்றுக்கொள்ளாமல் 2003 – 2013 காலப்பகுதியில் ரூபா 7,742,280 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ரஹதுன்கொடை தோட்டத்திற்கு 45 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள செயற்பாடற்ற முல்ஹல்கெலே தோட்டத்தின் பகுதியொன்றை ரஹதுன்கொடை தோட்டத்தின் பகுதியொன்றாக நிர்வகிப்பதன் அடிப்படையில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு எவ்வித வருமானமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் 2010 சனவரி முதல் 2013 மே வரை ஊழியர் சம்பளமாக ரூபா 13,404,947 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2013 ஆம் ஆண்டின் கணக்குகள் 2014 யூலை 01 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டிலிருந்தே இவ்வாறு கணக்குகள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

2011 – 2013 வரையான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தில் காணப்படும் சீரற்ற நிதி நிலைமை காரணமாக இத்திட்டத்தை செயற்படுத்தும் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு 2011 ஒக்தோபர் 07 ஆம் திகதி கூடிய பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது.

**5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**5.4 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்பட்டிருந்த போதிலும், உள்ளக கணக்காய்வு திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணி மற்றும் கட்டிடங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 8,215,722 தொகையான குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹோப் தோட்டத்தின் 2012 ஆம் ஆண்டிற்குரிய பணிக்கொடை செலவினமான ரூபா 1,038,553 அளவு செலவினக் கணக்கில் பதிவு செய்யப்படாமல் தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இத்தவறினை 2013 ஆம் ஆண்டின் கணக்கு ஊடாகவும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கணக்கின் மீதியான ரூபா 2,261,885 தொகை 2013 ஆம் ஆண்டின் கணக்குகளிலும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) றொக்வுட் தோட்டம்**

(i) தோட்டத்தின் பொதுப் பேரேட்டில் ரூபா 10,304,340 ஆன வரவு மீதிகளுடன் கூடிய 35 கணக்குகள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன், ரூபா 1,628,097 பெறுமதியுடன் கூடிய செலவு மீதிகளைக் கொண்ட 27 கணக்குகளும் செயற்பாடற்றுக் காணப்பட்டன. இம்மீதிகள் வருடக் கணக்காக முன்கொண்டு வரப்படும் கணக்குகளாக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் இக்கணக்குகளுக்கு தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையின் பிரகாரம் இணக்கக் கணக்கின் மீதி ரூபா 8,811,646 ஆக இருந்தது. அம்மீதி எந்த கணக்குகளின் வரவு செலவு மீதிளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் காணப்படவில்லை. அவ்வாறே அக்கணக்கு மீதிகளை தனியான கணக்கொன்றுக்கு எடுப்பதின் நோக்கம் மற்றும் அவ்வாறு செய்வதற்குரிய அதிகாரத்தை வழங்குதல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஈ) ரஹதுன்கொட தோட்டம்**

(i) தோட்டத்தின் தேயிலைக் கொழுந்து Rossling Hill தொழிற்சாலைக்கு வழங்குவதற்காக 2006 ஆம் ஆண்டிலிருந்து தோட்டத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 555,890 ஆன தொகையினை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இருப்புக் கொள்வனவு தொங்கல் கணக்கு மீதி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,554,872 ஆக இருந்தது. அக் கொடுக்கல்வாங்கல்கள் இனங்காணப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) கந்தல்னுய தோட்டம்**

(i) 2009 ஆம் ஆண்டின் போது ஒஹுகல் ஓய தேயிலைத் தொழிற்சாலைக்கு வழங்கிய பச்சை தேயிலைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 148,896 தொகையை அறவிடுவதற்கு நிறுவகம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) இருப்புக் கொள்வனவு தொங்கல் கணக்கு மீதி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,735,704 ஆக இருந்தது. அக் கொடுக்கல்வாங்கல்கள் இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்
(ஆ) குத்தகை வருமானத்தை சேகரித்தல்
(இ) கணக்கீடு
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(உ) நிலையான சொத்துக்கள்
(ஊ) வருமானம்